Universology(?)
V12 No 5 My 1930

JL
211, N1934
N30·12·5
210786

"BALAVINODHINI"



CHILDREN'S FRIEN

# பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:

வரகவிதிரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XII MAY 30. № 5



PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet. MADRAS.

*N. B.*:—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

**All Rights Reserved by the Publishers.**

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தெய்வ வணக்கம் ... ... ... | 193 |
| ஹிதோபதேசம் ... ... ... | 194—197 |
| விதியின் பயனே பயன் .... ... | 198—204 |
| அடே மடையா நீ யார்? ... | 205—207 |
| காலமும் அதன் உபயோகமும் 1 ... | 208—213 |
| "நீர் விளையாடேல்" ... ... | 214—217 |
| தீ விபத்து .... ... .... | 2.8—219 |
| அதிக ஆசை அதிக நஷ்டம் ... | 220—224 |
| எனக்கு ஏன் பிழைப்பு கிடைக்கவில்லை? ... ... ... | 225—226 |
| தெய்வபேத நினைப்பது பாபம் ... | 227—229 |
| சபாநாதர்பேரில் முத்துத்தாண்டவர் கீர்த்தனம் ... ... ... | 230—231 |
| நித்திரையற் றிருப்பவர்கள் ... | 232 |
| சந்திரன் ... ... ... | 233—239 |
| கிராமங்களின் வறுமை நீங்க வழி .... | 240 |


குறிப்பு:—எமது கம்பெனி கையொப்பமிட்ட எமது ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமற்போனால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

# குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


| ாகுதி 12 | 1930 ௵<br>மே மாதம் | பகுதி 5 |
| --- | --- | --- |


## தெய்வ வணக்கம்

அச்சமுறு கோரமொடு கர்ச்சித் ததட்டிவரும்
அலகை வேதாள பூதம்
ஆறாத கவலை தரு தீறாத கொடியநோய்
அண்டுமோ நினது கருணை
வைச்சுமூவுலகங்கள் மெச்ச நீ விளையாடும்
மகிமைபெறு தலமாறினும்
வையகத் துயிர்தழைத் துய்யவருள் பெய்யும் விழி
வள்ளி தெய்வானையுடனே
விச்சித்ர விஸ்தார நிர்த்தக் கலாப மயில்
மீது நின் சேவைகண்டு
வேறுகதியில்லையென் றெண்ணியுனையே நம்பி
மெய்யன்பு செய்யுமவர்பால்
பச்சைப் பசுங்கொண்டல் மேனியுமை யம்மையருள்
பால சுந்தர வேலனே
பழமறைக டருசில மழவிடையரருள் பால
பழனிமலை முருகேசனே

(பாரதி)

210786

# ஹிதோபதேசம்

1 சற்குணமுடைய புதல்வன் தன் சரீரம் அழியும் வரையில் அச்சரீரத்தைத் தனக்களித்த மாதாவையும் பிதாவையும் மறக்கமாட்டான்; அவர்களுடைய குண விசேஷங்களைப் பாராட்டாமலிருக்கமாட்டான்.

2. பீஷ்மர் என்கிற மகான் தம்முடைய தந்தைக்கு இதஞ் செய்வதையே பெரிதாய் எண்ணி விவாகம் செய்து கொள்ளாமலிருந்தார். அவருக்குக் குரு பக்தியே மனைவி! நியமமே புதல்வன்! வித்தையே பெண்! தவமேசெல்வம்! ஸத்தியமே ஸர்வசாம்ராஜ்யம்! விவேகமே பந்து.

3. பீஷ்மருக்கும் அர்ஜுனனுக்கும் குருக்ஷேத்ர பூமியில் கடுமையான போர்நடந்தது. அதில் அர்ஜுனன் களைத்துப்போனான். பீஷ்மருடைய கடுமையான யுத்தத்தில் அர்ஜுனனுடைய படைவீரரனைவரும் கதறினர். இச்சமயம் அர்ஜுனனுக்கு ஸாரதியாயிருந்த கிருஷ்ணபகவான் (பார்த்தஸாரதி-பார்த்தனுக்கு ஸாரதியாயிருந்தபடியால் அப்பெயர் ஏற்பட்டது) இரதத்திலிருந்து கீழே இறங்கி ஓடிவந்து பீஷ்மரை எதிர்த்தார். பீஷ்மர் சிறிதும் அச்சமில்லாமல் அவர் முன்னே நின்று "நான் காலதண்டத்திற்கு அஞ்சுவதில்லை. உமது சக்தி பெருந்தடையின்றிச் செல்லும்



வன்மையுடையது. ஆயினும் மரங்களைப் பிளப்பதில் வல்ல கோடரியானது கல்லில் உபயோகிக்கப்பட்டது போல் என்னைப்போன்றவர்களிடம் கூர்மழுங்கிவிடும். அல்லாமலும் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கும் இச்சரீரத்தில் எனக்குச்சிறிதும் அபிமானமில்லை. ஆனால் பொய்சொல்வதில்மாத்திரம் பயப்படுகிறேன். அதுதான் பெரிய மிருத்யு; எமன் மிருத்யுவல்ல என்பது என் அபிப்பிராயம்" என்றார்.

3. பீஷ்மர் தம் முன்னே கிருஷ்ணபகவான் நிற்கக்கண்டதும் மகிழ்ந்தார்; "பகவானே உமக்கு என்னிடமிருக்கும் கிருபையை நான் என்னென்று சொல்வேன். இப்பொழுது நான் மரணமடையவேண்டிய கடைசிக்காலம். இச்சமயத்தில் ஒருவன் எதைக் காண்கிறானோ அதனையே வரப்போகின்ற பிறவிக்குக் காரணமென்று சொல்லுகிறார்கள் பெரியோர்கள். இப்படிப்பட்ட காலத்தில் நீர் என்முன் பிராப்தமாயிருக்கிறீர். ஒருவனுக்கு அவன் புண்யம் இதைவிட எதைத் தான் ஸாதித்துக் கொடுக்கும்" என்றார்.

4. தர்மபுத்திரர் பீஷ்மரைநோக்கி, இராஜ தர்மத்தை விளக்கியருளும்படி கேட்டார்.

பீஷ்மர் கூறுகிறார்—

இராஜதர்மங்கள் பல. அவற்றில் பிரஜைகளைப் பரிபாலிப்பது மேன்மையானது. அத்தொழிலை முறை பிறழாது நடத்தும் அரசனுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும் பரலோக சுகத்திலும் குறைவுண்டாவதில்லை.

ராஜா என்னும் சொல்லுக்கு ரஞ்சனம் என்பது பொருள். அதாவது அரசன் பிரஜைகளைத் தன்னிடம் அன்பு பாராட்டும்படி செய்தலாம். அரசனைக் கர்ப்ப ஸ்திரீகளுக்குச் சமானமாகக் கூறுவதுண்டு. ஏனெனில் கர்ப்ப ஸ்திரீகளுக்கு . அன்னபானாதிகளிலே விருப்பமிருப்பதில்லை. ஆனால் கர்ப்பத்தை வளர்ப்பதற்கு அன்னபானாதிகள் அவசியம். ஆகையினால் அவர்கள் தங்களுக்கு விருப்பமில்லாத அன்னபானாதிகளையுண்டு அந்தக் கர்ப்பத்தைக் காப்பாற்றுகிறார்கள். அது அவளுடைய கடமையாகிறது. இதுபோலவே அரசனும் பிரஜைகளுக்கு விருப்பமான செய்கைகளைச் செய்யக் கடமைப்பட்டவன்.

அரசன் மிகவும் கொடூரமாகவாவது பொறுமையுடனாவது இருப்பது கூடாது. பொறுமையுடனிருந்தால் யானையின் தலையின்மீது மாவுத்தன் ஏற நேரிடுவதுபோல் ஆபத்துக்குப் பாத்திரமாவான். மிகவும் கொடூரமாக இருந்தால் ஜனங்கள் நடுக்கமும் விரோதமும் கொள்வார்கள். ஆகையினால் அரசன் வசந்தகாலத்தில் வீசும் தென்றலைப்போல் மிருது குரூரத்தன்மை இரண்டிற்கும் நடுவிலிருந்து புவியை ஆளவேண்டும்—என்று கூறி, "நீ செய்யவேண்டிய வேலைகளைச் செய்வதில் சோம்பலாயிராதே! சோம்பேறியின் முகத்தில் லட்சுமி விலாசம் உண்டாகாது"—என்றும் நீதி போதிக்கலானார்.

5. (a) தன்வயிற்றை நிரப்பிக்கொள்வதனால் மாத்திரம் பெரியவனாய்விட்டதாக எண்ணும் மனிதனைப் புருஷனென்று அழைக்க எந்த மூடனும் துணியான். அவன் புருஷ வடிவான ஒரு மிருகமேயாவன்.



(b) பிறருக்குத் தீங்குசெய்யக் கருதும் ஒவ்வொருவனும் நாம் இவனைத் தொந்தரவு செய்வதுபோல் இவன் நம்மைத் தொந்தரவு செய்தால் நமக்கு எப்படியிருக்கும் என்று சிந்திக்கவேண்டும்.

(c) பிறருக்கு ஹிம்ஸைபுரியாதிருப்பதே முதன்மையான தர்மமாகும். (d) மிகவும் அற்ப எண்ணமுடையவனே பிறரை ஏமாற்றி வயிறுவளர்ப்பான்.

(e) பொய்பேசுகிறவன் தன்னையே ஏமாற்றிக்கொள்கிறவனாவான்.

(f) தன்னையே ஏமாற்றிக்கொள்கிறவனுக்கு உய்யும் வழியாதென்று புலப்படவில்லை.

(g) வேடிக்கையாகப் பொய்சொல்வதிலும்கூட உத்தமகுண சீலனுடைய நா எழாது.

6. எப்பொழுது சகல தர்மங்களும் மாறிவிடுகின்றனவோ எப்பொழுது உலகம் மிகுதியும் உபத்திரவமடைந்துவருகின்றதோ அக்காலத்தைப் பெரியார் கலியுகமென்று சொல்லுவார்.

7. பொருளில்லாவிட்டால் இவ்வுலகத்தில் மூச்சுவிடவும் முடியாது.

8. யுத்தவீரன் தன்கையில் கிடைத்த பொருளை வாயிற் போட்டுக்கொண்டு காலந்தள்ளுவது வெட்கக்கேடாம்.

9. சரீரம் இயற்கையிலே நாசமடையுந் தன்மையது. அதனைத்தடுத்தற்கு யாராலுமாகாது.

(பீஷ்மர்)

# விதியின் பயனே பயன்

பூர்வம் பரீக்ஷித்து என்னும் பெயர் படைத்த வேந்தனொருவனிருந்தான். அவன் பாண்டவர்களில் ஒருவனும் ஒப்புயர்வற்றவனுமாகிய அர்ஜுனன் என்பவனுடைய மகன் அபிமன்யூவின் புதல்வன். பரீக்ஷித்து தன்னுடைய அன்னையின் வயிற்றிலிருக்கும் போதே அசுவத்தாமா என்பவன் அவனைக் கொல்ல நினைத்தான். அதனால் அவன் ஓர் அக்கினியாஸ்திரத்தை மந்திரித்து விட்டான். பாண்டவர்கள் சற்குண சீலர்கள். பகவானிடம் விசுவாசமுடையவர்கள். ஆகையினால் அவர்களுக்குக் கிருஷ்ண பகவான் சகாயஞ்செய்ய முன்வந்து **பாண்டவர் சகாயன்** என்னும் பெயர் பெற்றார்.

இப்படி அசுவத்தாமா பரீக்ஷித்துக்குக் கேடு சூழ்ந்ததை அறிந்த பகவான் பாலகோபால மூர்த்தி, பரீக்ஷித்திருந்த கர்ப்பத்தில் தாமுமிருந்து அவன்மேல் அஸ்திரம் விழவொட்டாமல் காப்பாற்றினார். இவன் இப்படி கிருஷ்ணபகவானைக் கர்ப்பத்திலேயே தரிசித்தபடியால் இவனுக்குப் பரீக்ஷித்து என்று பெயர் ஏற்பட்டது. அசுவத்தாமா தவமகிமையுடையவனாதலால், அவனுடைய அஸ்திரம் வீண் போகவில்லை. அது பரீக்ஷித்தைக் கரிந்துபோன கட்டைபோலாக்கிப் பூமியில்



உதிக்கச் செய்தது. பகவான் அதைச் சாதாரணச் சிசுவைப்போல் உயிர்ப்பித்தருளினார். அதனால் அவனுக்கு **விஷ்ணுராதன்** என்று ஒரு பெயர் ஏற்பட்டது.

பரீக்ஷித்து அரசனாக முடிபுனைந்து பூமியை ஆளுங்காலத்தில் ஒரு நாள் சேனைகள் சூழக் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். வெகுநேரம் வேட்டையாடித் திரும்புகையில் வழிமேலிருந்த **சமீகர்** என்னும் பெயர்கொண்ட முனிவருடைய ஆசிரமம்போய், தாகத்திற்கு ஜலம் வேண்டுமென்று கேட்டான். அவர் அப்பொழுது நிஷ்டையிலிருந்தபடியால், பரீக்ஷித்தின் வேண்டுகோள் அவர் செவியிற்படவில்லை. அதனால் அவர் மௌனநிலையிலேயே இருந்தார். அதுகண்ட அரசன் சினங்கொண்டான். அதனால் அவனுக்கு மதிமயங்கியது. பின்பவன் தான்செய்வது தர்மம் அதர்மமென்பதையும் உணராதவனானான். அதனால் அவன் அங்கே செத்துக்கிடந்த ஒரு பாம்பைத் தன் கைக்கோலினால் எடுத்து முனிவர், கழுத்திலே போட்டு விட்டுச் சென்றான். பின்பு கோபந்தணிந்ததும் தான் செய்த காரியம் தவறென்பதை உணர்ந்து கூச்சமடைந்தான்; கோபங்கொடிது என்பதை நன்றுணர்ந்தான்; கோபத்தினும்பகை வேறில்லையென்பதைத் தெரிந்துகொண்டான்.

மன்னன் இவ்வாறு செய்துவிட்டுச் சென்ற மறுநிமிஷத்தில் அங்கே சமீகருடைய புதல்வராகிய **சிருங்கி** என்பவர் வந்தார். அவர் தந்தையின் கழுத்தில் செத்த பாம்பு மாலையாகக் கிடப்பதைக் கண்டு மனம்

பதைத்து அங்கிருந்த பிள்ளைகளை விசாரித்து அவர்களால் பரீக்ஷித்து வந்தது முதல் நடந்தவைகளை யெல்லாம் தெரிந்து கொண்டார்; "ஆகா! என்னே கொடுமை! இதுவோ அரசனுக்கடுத்த செய்கை!" என்றெண்ணிக் கோபாவேச மடைந்து, "இறந்த பாம்பை என் தந்தையின் கழுத்தி லிட்டவனெவனோ அவன் தக்ஷகன் என்னும் பாம்பால் இன்னும் ஏழு நாட்களில் கடியுண்டிறக்கக் கடவன்" என்று சாபங் கொடுத்தார்; பிறகு தாம் சாபமிட்டதைத் தந்தையிடமும் கூறினார்.

சமீகர் இதைக் கேட்டதும் மனமிக வருந்தி மைந்தனைப் பார்த்து, "என்ன காரியம் செய்தாய்! இது மூடத்தனமான செய்கை! நிதானியாமல் எந்தச் செய்கையும் செய்யலாகாதென்பது உனக்குத்தெரியவில்லை. **'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'** என்னும் பழமொழி உன்னைப் போன்றவனை நோக்கியே உண்டானதுபோலும்! பரீக்ஷித்து மகா பரிசுத்தன்; ஹரிபக்தன், உத்தம குணங்களையப் பெற்றபெரியவன்; கலிபுருஷனைக் கடந்தவன், நீதிக்குக் கட்டுப்பட்டவன். அந்த ராஜேந்திரனால் உலகம் தீங்கு நீங்கி நன்னிலையிலிருந்து வருகிறது. அவனுடைய செங்கோல் வன்மையினாலேயே நாம் ஒருவித இடையூறுமில்லாமல் தவமியற்றுகிறோம். மழை பெய்து நாடு செழித்து விளங்குவதற்கும் அரசனுடைய செங்கோலே காரணம். இவைகளை யெல்லாம் உன்னைப் போன்றவர்களே மறப்பதென்றால் மற்றவரைப் பற்றிப்பேசுவதெப்படி? ஓர் அற்ப குற்றத்திற்காக நீ இப்படிப்பட்ட கடுந்தண்டனை கொடுத்தது



கொடுமை! இனி என்ன செய்யலாம் ஒரு காரியஞ் செய். நீ இப்படி சாபங் கொடுத்திருப்பதை அரசனுக்குத்தெரிவி. அவன் தன் ஆத்மா நற்கதி யடைவதற்குரிய மார்க்கத்தைத் தேடிக்கொள்ளட்டும். நிற்காதே! இதையேனும் உடனே செய்! உன் சாபந் தவறாமற் பலிக்கும்! என்ன செய்யலாம். ஆலோசனை யில்லாதவன் மூடனிலும் கேடுகெட்டவனாவான்" என்றார்.

இதைக் கேட்டதும் சிருங்கியும் தம்முடைய குற்றமுணர்ந்து வருத்தப்பட்டு அரசனுக்குத் தாம் சாபமிட நேர்ந்ததை ஒருவர் மூலமாகத் தெரிவித்தார்.

என்ன செய்யலாம். சகலமும் தெரிந்த பெரியாரும் இப்படி சில சமயம் தவறு செய்கின்றனர். இதனாலேதான் "தவறு செய்வது மனிதனுக்கியற்கை யென்றும் "யானைக்கும் அடிசறுக்கும்" என்றும் உலகிற் பெரியார் அடிக்கடி சமயம் நேர்ந்தபோது சொல்லிக் காட்டுகின்றனர்.

தனக்கு நேர்ந்த கொடிய சாபத்தைக் குறித்துப் பரீக்ஷித்து வருத்தப்படவில்லை. ஆனால் தான் செய்த கொடிய அபசாரத்தை யெண்ணி வருந்தினான்; பின்பு இதைப் பற்றித் தான் அப்பால் செய்யவேண்டியதைக் குறித்து மகரிஷிகளிடம் ஆலோசனை செய்தான். மகரிஷிகளில் சுகர் என்பவர் "இந்த ஏழு நாளும் பாகவத புராண ச்ரவணம் செய்வது சிறந்தது" எனக் கூறினார். அரசன் அவ்வாறு செய்ய உடன் பட்டான். அப்பால் தன் மந்திரிகளிடம் ஆலோசனை செய்து, ஒற்றைத்

தூணோடு கூடிய ஒரு பெரிய மாளிகையைக் கட்டி அதற்குத் தக்க காவல் ஏற்படுத்தி அதில் வசிக்கலானான். அங்கே விஷ வைத்தியர்களையும் ஔஷதங்களையும் மந்திரஸித்திபெற்ற பிராம்மணர்களையும் நியமித்தான். அந்த மாளிகை இதில் காற்றணுகுவதும் முடியாதென்று சொல்லும்படி அமைக்கப்பட்டிருந்தது.

பரீக்ஷித்து அதிலிருந்து கொண்டு சுகப்ர்மரிஷியிடம் பாகவத புராண ச்ரவணம் செய்தான். அப்படியிருக்கையில் ஏழாவது நாள் வந்தது. அரசனை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றித் தக்க பரிசுபெறலாமென்று கருதிக் காசியபரென்னும் பிராம்மணர் வந்தார். சிருங்கிமகரிஷியின் சாபப்படி அரசனைக் கடித்துக் கொல்லத் தக்ஷகன் என்னும் சர்ப்பம் பிராம்மண ரூபத்துடன் வந்தது. இரண்டு பிராம்மணரும் வழியில் சந்தித்துக் கொண்டனர். தக்ஷகனாகிய பிராமணன் காசியபரை 'நீர் எங்கே போகிறீர்?' என்று விசாரித்தான். காசியபர், 'நான் அரசனுக்கு நேரிடும் ஆபத்தை நீக்கப்போகிறேன்'' என்றார். தக்ஷகன், 'நீ விஷத்தைத் தீர்த்துச் சுகமுண்டாக்கவல்ல மந்திரவாதி போலும்,—அப்படியானால் நான் இதோ இம்மரத்தைக் கடிக்கின்றேன். இது நான் கடித்ததும் பட்டுக் கரியாகும். நீர் இதைப் பிழைப்பியும் பார்க்கலாம். நான் தான் தக்ஷகன்'' என்று அருகிலிருந்த பெரிய ஆலவிருக்ஷத்தைக் கடித்தது. அம்மரம் உடனே பற்றி யெரிந்து கரியாயிற்று. காசியபர் அம்மரத்தின் சாம்பலை யெல்லாம் குவித்து மந்திரமோதி அதனைத் தக்ஷகன் கண்ணெதிரிலேயே பிழைப்பித்தார். அது கண்டு தக்ஷகன் வியப்புற்று, "இந்தப் பிராமணன் அரசனிடம் போவானால் அவனைத் தவறாமல் ஆபத்திலிருந்து காப்பாற்றுவான். அப்பால் நம்முடைய செய்கை பயனற்றதாய்ப் போய்விடும். இந்த அந்தணனை அங்கே போகவொட்டாமற் செய்துவிடவேண்டும்.'' என்று கருதிக் காசியபரைப் பார்த்து, "நீர் பொருளை யுத்தேசித்துத் தானே அரசனிடம் போகிறீர்! அந்தப் பொருளை நான் உமக்குத் தருகிறேன். நீர் இவ்விடமிருந்தே திரும்பிவிடும். அரசனுக்குப் பிராமண சாபத்தினால் நேரிடும் ஆபத்திது. இதனை உம்மால் தடுக்கமுடியாது. அப்படியாமாயின் உமது கீர்த்திக்குக் குறைவேற்படும்.'' என, காசியபர் "எனக்குப் பொருள் வேண்டும். பொருள் கொடுத்தால் திரும்பிவிடுகிறேன்'' என, தக்ஷகன், பிராமணன் விரும்பும் பொருளை அவ்விடத்திலே கொடுக்க, அதைப்பெற்றுக் கொண்டு அவர் திரும்பினார்; போகும் போது "அரசனுக்கு ஆயுள் முடிவு காலம் நெருங்கியது. ஆகையினால் இதிற் பிரவேசிப்பதை விடப் பொருள் லாபத்துடன் திரும்புவதே உசிதம்'' எனக் கண்டு தம் ஊர் போய்ச் சேர்ந்தார். பின் தக்ஷகன் உற்சாகத்துடன் தன் காரியத்தை முடிக்கச் சென்றான். அரசனிருக்கும் மாளிகை சென்றதும் அது தக்க காவலுடனிருப்பதை அறிந்து, 'இவ் வரசனை வஞ்சனையினாலேயே கொல்லவேண்டும்' என்று தீர்மானஞ் செய்துகொண்டு, அநேக ஸர்ப்பங்களை ரிஷிவேஷத்துடன் கனி வர்க்கங்களை யெடுத்துக் கொண்டு அரசனிடம் போய்க் காணும்படி ஏவியது. அச்சர்ப்

பங்கள் அவ்வாறே செய்தன. அரசன் ஸர்ப்ப ரிஷிகள் கொண்டுவந்த பழங்களை யெல்லாம் ஏற்றுக்கொண்டு அவைகளை அனுப்பிவிட்டான்.

அப்பழங்களில் ஒன்றில் தக்ஷகன் மறைந்திருந்தான். விதியின் வன்மையினால் தூண்டப்பட்ட அரசன் அந்தப் பழத்தை யெடுத்துப் புசித்தான். அப்பொழுது அப்பழத்தினின்றும் நீளமில்லாததும் கறுத்த கண்களையுடையதும் சிவந்த வர்ணமுள்ளதுமாகிய சிறு புழு வெளிப்பட்டது. அதைக்கண்ட அரசன், "சூரியன் அஸ்தமனமாகிறான்; இனி விஷத்தின் பயம், எனக்கில்லை" என்று கூறி அப் புழுவைத் தன் கழுத்தில் வைத்துக்கொண்டு சிரித்தான். அப் புழு உடனே பெரிதாகிப் பேரிரைச்சல் இரைந்து கொண்டு அரசனைக் கடித்தது. அப்பொழுது அந்த வீடு முழுவதும் விஷாக்கினி பிரகாசித்தது. அதனால் அமைச்சரும் ஏனையரும் அங்கிருக்க முடியாமல் அதனை விட்டுச் சென்றனர். அந்த வீடும் உடனே இடியினால் தகர்க்கப்பட்டதுபோல் இடிந்து விழுந்து சிதறியது. பின்பு அவ்வரசனுக்குச் செய்யவேண்டிய பாலோகக் கிரியைகளெல்லாம் செய்து முடிந்தன. அதன் பின் பரீக்ஷித்தின் மூத்த புதல்வனாகிய ஜனமேஜயன் என்பவன் பட்டத்திற்கு வந்து சுகமாக வாழ்ந்துவந்தான்.

இதனால் ஜனங்கள் "விதியின் பயனே பயன்" என்பதைக் கண்டுணர்ந்தனர். "விதிவழி புத்தி செல்லும்" என்பதும் இச்சரித்திரம் நன்கு விளக்குவதாயிற்று.

## அடே மடையா நீ யார்?

ஒரு நாள் ஓர் அரச குமாரன் உய்யான வனத்துக்கு உலாவச் சென்றான். அங்கே ஓரிடத்தில் நிற்கையில் ஓ என்று ஓலமிட்டான். எதிரொலி ஓ என்று பிரதிபலித்தது. பின் அரச குமாரன் "அடே மடையா நீ யார்?" என்று கத்தினான். எதிரொலியும் "அடே மடையா நீயார்" என்று கேட்டது.

இதைக் கேட்டதும் அரச குமாரன் "ஆகா இங்கே யார் நம்மை இவ்வாறு பழித்துப் பேசத் துணிந்தவன்?" என்று கோபங்கொண்டு "யாரடா என்னைப் பழித்துப் பேசுகிறவன்?—நான் ராஜகுமாரனென்று தெரியவில்லையா உனக்கு?" என்று கேட்டான்.

எதிரொலியும் அவ்வாறே உண்டாயிற்று. பின்பு அவன் கோபமும் விசனமு மடைந்து அழுதுகொண்டு தந்தையிடஞ் சென்று "அப்பா உய்யான வனத்தில் யாரோ ஒருவனிருக்கிறான். அவன் என்னைப் பழித்துப்பேசி அவமதிக்கிறான். அவனைப் பிடித்து வந்து கட்டியடித்தாலன்றி நான் சாப்பிடமாட்டேன்" என்றான்.

அரசன், "யாரடாவன் அங்கிருந்து அப்படிப் பேசுகிறவன்? இதோ நானே வருகிறேன். அவனைக்

கண்டு பிடித்துத் தண்டிக்கிறேன். விசனப்படாதே" என்று கூறிக் கோபத்துடன் மகனை அழைத்துக் கொண்டு சென்று சில காவலாளிகளை யேவித் தோட்ட முழுவதும் சோதித்துப் பார்த்தான். ஒருவருங் காணோம், பின் காவலாளியைப் பார்த்து, "இராஜ குமாரனை அலட்சியம் செய்யக்கூடிய துஷ்டன் இங்கு எவனேனு மிருக்கிறானா?" என்று கேட்டான்.

காவலாளி.—அப்படிப்பட்டவன் இங்கே ஒருவருமில்லையே!—என்றான்.

அப்பால் அரசன் மகனைப் பார்த்து, "ஒருவரையுங் காணோமே" என்றான். மகன் "ஒருவன், இருக்கிறான்! இதோ பாருங்கள். பேசுவான்" என்று கூறி— "அடே யாரடா மடையா?" என்று கத்தினான். எதிரொலியும் "அடே யாரடா மடையா?" என்று கேட்டது.

அரசன் அதனை எதிரொலி யென்று கண்டு கொண்டு மகனைப் பார்த்து, "நீ இப்பொழுது "ஏ நண்பா என்று கூப்பிடு" என்றான். மகன், "ஏ நண்பா" என்றழைக்க எதிரொலியும் அப்படியே உண்டாயது. மகன் அது கேட்டு வியப்படைந்து தந்தையின் முகத்தைப் பார்த்தான். அரசன், "அப்பா நீ சுகமாய் இருக்கக் கடவாய்! என்று கூறு" என்றான். மகன் அப்படியே கூவினான். எதிரொலியும் அவ்வாறே உண்டாயது.

அப்பால் அரசன் மகனை நோக்கி, "கவனித்தாயா? நீ எப்படி சொன்னாலும் அப்படியே தொனி கேட்கிறது. இதனை எதிரொலி யென்று சொல்வது. இது சில இடங்களில் உண்டாகும். விசேஷமாகப் பெரிய கட்டிடங்களிலே கேட்கும். இதனால் நீ தெரிந்துகொள்ள வேண்டிய நீதி யொன்றுண்டு. கவனி—நீ எப்படி கூவுகிறாயோ பின்னால் அப்படியே தொனியு முண்டாகிற படியால், நீ எப்படி எந்தக் காரியத்தைச் செய்கிறாயோ அந்தக் காரியத்துக்கு அந்த விதமே பயனும் ஏற்படும். நீ யாரிடம் எவ்விதமாய்ப் பக்ஷம் பாராட்டுகிறாயோ அவ்விதமே அவனும் பக்ஷம் பாராட்டுவான். நீயாருக்கு எந்த விதமான மரியாதை கொடுக்கிறாயோ அவனும் அந்தவிதமான மரியாதையே கொடுப்பான்—என்னும் நீதியை இது கற்பிக்கிறது. இதனாலே தான் உலகத்தில், 'வினை விதைத்தவன் வினை யறுப்பான் தினை விதைத்தவன் தினை யறுப்பான்' என்கிற பழமொழி வழங்குகிறது" என்றான்.



மகன் கேட்டு வியப்படைந்தான். அரசன், "அப்பா நான் சொல்வதில் நீ ஆச்சரியப்படுவது மாத்திரம் போதாது. இந்த நீதியை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, நீ அரசனான பின்பு, உன்னைப் பிரஜைகள் நல்லவனென்று கொண்டாடவும் உனக்கு நல்ல பெருமையும் பேரும் ஏற்படவும்—நீ அவர்களுக்கு இதமே செய்து வா. அவர்கள் நன்மை தீமைகளை உன்னுடையவைகளாக எண்" என்று புத்திமதி கூறி அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

அநுபவ முடையவர் அறிவே பெரிது.

# Time and its use I

## காலமும் அதன் உபயோகமும் 1

நாம் ஆகார நியமத்தைப்பற்றிப் பிப்ரவரிமாதப் பாலவிநோதினியில் எழுதினோம். இப்போது கால அளவைப்பற்றிப் பேசுவோம்.

காலம் அல்லது நேரம் என்பது பொழுதுபோவதின் அளவாகும். பூமி சுற்றுவதனால் சூரியோதயம் சூரியாஸ்தமனம் உண்டாவதிலிருந்து நம் முன்னோர்கள் கால அளவைத்தெரிந்து வந்தார்கள். இப்போதோ கெடியாரம் என்னும் காலங்காட்டுங்கருவியினால் கால அளவை வெகு சுலபமாகத் தெரிந்துகொள்கிறோம்; காலம் என்பது ஸெகெண்டுகள், நிமிஷங்கள், மணிகள், நாட்கள், பக்ஷங்கள், மாதங்கள், அயனங்கள், வருஷங்கள், நூற்றாண்டுகள், கல்பங்கள், யுகங்கள் ஆகிய இவைகளினால் அளவிடப்படுகிறது. நாமும் காலத்தினால் அளவிடப்படுகிறோம். இதுதான் ஆயுள் பரிமாணம் என்று சொல்லப்படுகிறது. தற்காலத்தில் புருஷாயுசு நூறு வருஷமென அமைந்துளது. ஆனால் கொள்ளை நோயின் வாய்ப்படுவதினாலும், சரீர சுகத்தைப் பொருட்படுத்தாமல் உழைப்பதினாலும், எதிர்பாராத ஆபத்துக்கள் நேருவதினாலும், ஒழுங்கீனமான வாழ்க்கை நடத்துவதினாலும் மனிதர்கள் அகால மரணத்திற்குள்ளாகிறார்கள்: ஆகவே இப்போது தீர்க்காயுளாகிய நூறுவருஷம் உயிருடனிருப்போரைக் காண்பது துர்லபமாகிறது.

நம் ஆயுள்பரிமாணத்தில் கால அளவு என்று ஒன்றிருப்பதால் அதைக்கவனித்துச் சரியான் வழியில் உபயோகப்படுத்திப் புருஷாயசு உயிருடனிருந்து அந்தக்காலத்தில் அரியபெரிய காரியங்களைச் செய்து தன்னைத்தனக்கும் உலகத்திற்கும் உபயோகப்படும்படியாகச் செய்துகொள்வது எடுத்தற்கரிய மானிடஜென்மம் எடுத்துள்ள ஒவ்வொருவருடைய முக்கிய கடைமையாகும்.

காலம் மிகவும் அருமையானது. "காலமே கருந்தனம்" வியாபாரிகள் காலத்தையே தங்களுக்குற்ற அரும்பெருஞ்செல்வமாகக் கொள்கிறார்கள். கலாவல்லவர்களும், பள்ளிச்சிறார்களும் காலத்தையே தங்களுடைய அபிவிருத்திக்கு அரும்பெருந்துணையாகக் கொள்கிறார்கள். ஞானிகளும் காலத்தை மோக்ஷஹேதுவாகக் கருதுகிறார்கள். காலத்தைப்போற்றிச் சரியான வழியில் உபயோகப்படுத்துவதனால் முதலில் நல்லொழுக்கமும், நல்லொழுக்கத்தினால் சரீரசுகமும், சரீரசுகத்தினால் திடகாத்திரசரீரமும் புத்திநுட்பமும், புத்திநுட்பத்தினால் இகபரசாதகங்களும், இகபரசாதகங்களினால் நீண்ட ஆயுளுடன் இந்த ஜென்மத்தில் போகபோக்யங்களை யனுபவிக்கும் பாக்யமும், ஞானமும்; ஞானத்தினால் மோக்ஷசாம்பிராஜ்யமும் அடையலாம்.

ஆனால் (Longfellow) லாங் பெலோ என்னும் மேனாட்டு மேதாவி சொல்லுகிறபடி (Life is short, Art is long and opportunity is fleeting) வாழ்நாளோ அற்பம், செய்யவேண்டிய வேலைகளோ அநந்தம், நேரமும் சந்தர்ப்பங்களோ நிலையற்றதாய் நிமிஷத்திற்கு நிமிஷம் பறந்துகொண்டிருக்கின்றன. ஆகவே காலத்தை அளவுபடுத்தி நமக்கு நேரும் சந்தர்ப்பங்களை நழுவவிடாது அவ்வப்போது கவனித்துக் காரிய சித்தி பெறுவது இன்றியமையாத கடமையாகும்.

குழந்தைகளே! நீங்கள் காலத்தை எப்படி அளவுபடுத்தி உபயோகப்படுத்துவதென்று யோசிக்கலாம்.

ஒவ்வொருவரும் பிரதிதினமும் விடியற்காலத்திலே படுக்கையை விட்டு எழுந்திருக்கவேண்டும்.—அப்போது புத்தி நல்ல தெளிவாக இருக்கும்-எழுந்திருந்து அந்தக் காலத்தை வீணாக்காமல் அவரவர்களுடைய நிலைமைக்குத் தக்கபடி பயன் தரும்படியான வேலையைச் செய்ய வேண்டும். ஒருவன் விடியற்காலம் 4-மணிக்கு எழுந்திருந்து 6-மணி வரையில் வேலைசெய்தால் ஒருநாளைக்கு 2-மணி நேரம் அதிகப்படியாக வேலைசெய்தவனாகிறான். இப்படி ஒரு மாதம் வேலைசெய்தால் 60-மணி நேரமும் ஒருவருஷத்தில் 720-மணி நேரமும் அதிகப்படியாக வேலை செய்தவனாகிறான். இவ்விதம் ஒருவன் 60-வருஷ காலம் விடாமல் வேலைசெய்துகொண்டு வருவானால் 5-வருஷம் உயிருடனிருந்து செய்யக்கூடிய வேலையை அதிகப்படியாகச் செய்தவனாகிறான். அப்படிக் கில்லாமல் ஒருவன் 4-மணி முதல் 6-மணி வரை



யில் சாதாரணமாக அநேகரிடம் வழக்கமாயிருக்கிறபடி படுக்கையிலேயே புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருப்பானால் மேலே குறிப்பிட்டபடி வேலைசெய்து முடித்தவனாக முடியாமல் போவதுடன் நோய்வாய்ப்பட்டு அகாலமரணத்திற்குள்ளாகவும் நேரிடும்.

"Early to bed and early to rise makes a, man healthy, wealthy and wise"

"ராத்திரி சீக்கிரம் படுத்துக்கொண்டு விடியற்காலம் சீக்கிரம் எழுந்திருப்பதே ஒருவனுக்கு நோயற்றவாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும், அளவற்ற ஞானத்தையும் தருவதாகிறது" என்று ஆங்கிலப் பழமொழி போதிக்கிறது. அநேக அரியபெரிய நூல்களை ழுதி உலகுக் குபகரித்திருக்கும் அநேக மேதாவிகளுடைய சரித்திரங்களும் அவர்கள் விடியற்காலம் எழுந்திருந்து வேலைசெய்ததே அந்நூல்களை எழுதிமுடிக்க அவர்களுக்கு முக்கிய சாதகமாயிருந்ததாகத் தெரிவிக்கின்றன. பள்ளிச் சிறார்களையும் விடியற்காலம் எழுந்திருந்து படித்தால் தான் படிக்கும் விஷயம் ஞாபகத்தில் பதிந்திருக்குமென்று பெரியோர்கள் தூண்டுகிறார்கள். ஞானிகளும் விடியற்கால நேரத்தையே யோகாப்பியாசம் செய்யத்தகுந்த நேரமாகக் கொள்கிறார்கள். ஆகவே விடியற்கால நேரத்தை வீணாக்காமல் தகுந்தவழியில் உபயோகப்படுத்துவதே உசிதமாகும்.

விடியற்காலத்திலேயே அன்று நாள் முழுதும் செய்ய வேண்டிய வேலைகளை அதாவது இன்னின்ன

வேலைகளை இன்னின்ன நேரத்தில் (Programme of work for the day) செய்யவேண்டுமென்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். தீர்மானித்தபடியே அந்தந்த வேலையை அந்தந்த நேரத்தில் செய்து முடிக்கவேண்டும். வேலையை யோசித்தே நிர்ணயிக்க மேண்டும். முடிக்க முடியாத வேலையை நிர்ணயித்து விட்டு இடர்ப்படுவது கூடாது. இரவில் அதிக நாழி தூக்கம் விழிக்காமல் சீக்கிரமாகவே படுத்துக் கொள்ளவேண்டும். சீக்கிரமாகப் படுத்துக்கொண்டால் தான் விடியற்காலம் சீக்கிரமாக எழுந்திருக்க முடியும்.

ஒருவனுடைய தேக ஆரோகியத்திற்கு 6-மணி நேரத்தூக்கம் அவசிய மெனக் கருதப் படுகிறது.

"One hour's sleep before midnight is worth more than two are worth after midnight"

முன்னிரவில் அதாவது நடு நிசிக்கு முன்னால் ஒருமணி நேரம்தூங்குவதானது பின்னிரவில் (நடுநிசிக்குப் பின்னால்) இரண்டு மணிநேரம் தூங்குவதற்கொப்பாகும் என்று வில்லியம் காபெட் (William Cobett) என்பவர் தெரிவிக்கிறார்.

இவ்விதமாக ஒருவன் தூக்கத்தையும் காலத்தையும் அளவு படுத்தி வேலை செய்து கொண்டே வருவானால் அவன் தன் வாழ்நாளின் முடிவில், வாழ்நாளாகிய வயலில் அநேக ஸத்கர்மங்களாகிய மாசூல்களை



அறுவடை செய்து அதன் பலனை அநுபவித்தவனாகிறான்.

காலத்தை அளவு படுத்திச் செலவிடுகிறவனுக்கு "நேரமில்லையே" என்கிற கஷ்டம் ஒரு சிறிதும் ஏற்படுவதில்லை. மேலும் அவன் காலத்தால் தள்ளப்படாமல் காலத்தை அவன் தன்னாளுகைக் குட்ப்படுத்திக் கொள்ளும் வல்லவனாகிறான்.

ஆனால் காலம் அளவு படுத்தப்படாமற் போனால் எந்தக் காரியத்திலும் குழப்பமும், அவசரமும், கஷ்டமும் ஏற்பட்டுக் கடைசியில் காரியமும் நிறைவேறாமல் அவஸ்தைக்குள்ளாகும்படி நேரிடும். இதைக் கவனியாமல் அப்படியே விட்டுக் கொண்டே வந்தால் வாழ்நாள் முழுதும் வீணாளாகிவிடும்.

A. Gopalaratnam.

---

## 127-வயதுக் கிழவன் குமரனாதல்

### 87-வயது மகனும் தந்தையும்

டில்பார்க்கு என்னும் நகரில் 127-வயதுடைய ஜோஸப் பிண்டோவல் என்னும் முதியவர் ஒரு 47-வயதுடைய மாதினை மூன்றாவது மனைவியாக மணந்து கொண்டுள்ளார் 80-வயதிற்கு மேற்பட்ட அவரது மகனார் அவர் மணத்திற்கு விஜயஞ் செய்தனர். இவர் ஹாட்டன்டாட்ஸ் என்னும் ஆப்ரிக்கா தேச மக்கட் பிரிவுகளில் ஓர் பிரிவினையைச் சார்ந்தவர். அமெரிக்காவுக்கு ஓர் அடிமையாக விற்கப்பெற்றவர்.

## “ நீர் விளையாடேல் ”

“நீர் விளையாடேல்” என்னும் இச்சிறு வாக்யம் ஔவையார் திருவாய் மலர்ந்தருளிய ஆத்திசூடியிலுள்ளது. ஆத்திசூடியை ஓதியுணர்ந்தவன் நீந்தத் தெரியாதவனாயிருந்தால் இவ்வாக்கியத்தை அவன் அடிக்கடி நினைத்துக்கொள்வான். நீந்தத் தெரிந்தவர்களும் இவ்வாக்கியத்தை மறப்பது கூடாது. “யானைக்கும் அடி சறுக்கும்” என்ற பழமொழி யுண்டாகையினால் நன்றாய் நீந்தத் தெரிந்தவர்களும் நீர் நிறைந்த குளத்திலோ அல்லது ஆற்றிலோ இறங்கும்போதோ அல்லது ஸ்நானம் செய்யும்போதோ மிகவும் ஜாக்ரதையாகவே செய்வதவசியமாகும். இதை யறிந்த மதியூகியாகிய ஔவையார் “நீர் விளையாடேல்” என்ற கட்டளையைப் பிறப்பித்தனர்.

“நீர் விளையாடேல்” என்ற கட்டளை சிறுவர்க்கென்று நினைத்து அலட்சியம் செய்வது கூடாது. நீர், நெருப்பு, காற்று—இம்மூன்றையும் எதிர்க்கவல்லமை யுடையேம் என்று எவரும் இறுமாப்படைவதற்கியலாது. ஆகையினால் நீர், நெருப்பு, காற்று இம்மூன்றினிடமும் ஜாக்ரதையாகவே இருக்கவேண்டும்.



ஆறு சுழலினாலும் இழுப்பினாலும் மனிதனை இடர்க்குள்ளாக்கும். குளத்தில் அப்படி இடர் செய்வதற்குரியவை இல்லையென்றாலும் வெகுநேரம் நீந்திக் கைகளோய்ந்து போகுமானால் எந்த இடத்திற் கை ஓய்ந்து போகுமோ அந்த இடத்திலேயே மூழ்கி இறக்கநேரிடும். ஆறு குளங்களை யல்லாமல் ஆழமான சிறு குட்டைகளிலும் மனிதன் ஆழ்ந்து இறப்பதுண்டு. இவைகளையல்லாமல் நீர் வீழ்ச்சிகளில் அகப்பட்டுக் கொள்வோமானால் நீந்துவதில் இணையற்ற சமர்த்தனாயிருந்தாலும் தப்புவதரிதாகும்.

நம்முடைய தமிழ் நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த திருக்குற்றாலத்தில் ஒரு நீர் வீழ்ச்சியிருக்கிறது. பாபவிநாசத்தில் ஒரு நீர் வீழ்ச்சியிருக்கிறது. இந் நீர்வீழ்ச்சிகளில் திருக்குற்றால நீர்வீழ்ச்சியில் நீராடுகிறவர் அதிகமாவர். திருக்குற்றால நீர்வீழ்ச்சியில் நாற்புறமும் மலைப்பிரதேசமாகவிருக்கும். நல்ல கோடைகாலத்திலும் அங்கே குளிர்ச்சியாகவே இருக்கும். கோடைகால வாசத்திற்குக் கொடைக்கானல், நீலகிரி, சேர்வராயமலை முதலிய இடங்களுக்குப் பிரபுக்கள் செல்வதுபோல் திருக்குற்றாலத்துக்கும் செல்வர். இந்நீர்வீழ்ச்சி செங்குத்தான மலைப்பிரதேசத்திலிருந்து கீழேவிழுகிறது பார்க்கப்பயங்கரமாயிருக்கும். அதன் இரைச்சலும் நீர் கீழேவிழுந்ததும் துள்ளி மேடுபள்ளமிட்ட வண்ணம் ஓடுவதும் விநோதமாயிருக்கும். ஜனங்கள் இந்நீர் வீழ்ச்சிக்கு நேராக உட்கார்ந்து நீராடுவது வழக்கம். அப்படி நீராடுவோர்க்கு அபா

யம் நேரிடாதபடி காக்க ஸர்க்கார் அதிகாரிகள் இரும்புச் சங்கிலிகளும் கைப்பிடிகளும் வேலிகளும் போட்டிருக்கிறார்கள். இப்படி பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கும் இந்நீர் வீழ்ச்சியில் நீராடுவோரில் எவரேனும் வருஷந்தோறும் மூழ்கி மரணமடையாமலிருப்பதில்லை.

இந்த நீர்வீழ்ச்சியில் மகாதேசபக்த சிரோமணியாகிய வ. வெ. சு. ஐயர் என்பவரின் செல்வப் புதல்வி மூழ்கி இறந்தாள். அப்பெண்ணைக்காப்பாற்ற முயன்ற ஐயர் அவர்களும் இதில் மூழ்கிக் காலமானார். இந்த கோரசம்பவம் மறக்கத்தக்கதன்று. இதே நீர்வீழ்ச்சியில் சென்னை ஹைகோர்ட்டில் வேலையாயிருந்த ஸ்ரீமான் செங்கல்வராயர் என்பவரும் மூழ்கி இறந்தனர்.

பாபவிநாசத்திலுள்ள கலியாண தீர்த்த நீர்வீழ்ச்சியில் இந்தவருஷப்பிறப்பு புண்ணியகால ஸ்நானத்துக்குச்சென்ற கைக்கிளவரொருவர் நீரில் மூழ்கி மேல் வரமுடியாமல் காலமாயினர். இப்படியே புண்ணிய காலத்தை யொட்டி நதிகளில ஸ்நானஞ் செய்யும் போதும் கடலில் ஸ்நானஞ் செய்யும்போதும் ஜனங்களுக்கு மரணம் சம்பவிப்பது வழக்கமாயிருக்கிறது. ஆகையினால் நாம் எப்போது நீராடினாலும் "நீர் விளையாடேல்" என்ற நீதிவாக்கியத்தை மனத்தில் நினைப்போமானால் நமக்கு நீர் ஆபத்துக் கிடமானது,



ஜாக்ரதையாயிருக்கவேண்டும் என்கிற எண்ணமுண்டாய், ஆபத்துக்காளாகாமல் தப்ப இடமுண்டாகும். பெரியார் கூறியிருப்பதெல்லாம் அநுபவத்திற் கண்டதாதலால் அவைகளை அலட்சியம் செய்வது கூடாது. நீந்தத் தெரிந்து அடிக்கடி நீர் நிலையங்களிலும் ஆறுகளிலும் நீர்வீழ்ச்சிகளிலும் ஸ்நானஞ் செய்வோரையுங்கூட நீர் ஆபத்துக்குள்ளாக்குமானால் நீந்தத்தெரியாதவர்களும் அநுபவமில்லாதவர்களும் நீரில் ஸ்நானஞ் செய்கிற காலத்தில் அஜாக்ரதையாயிருப்பது அறிவீனமாகுமன்றோ?

## விநோத ஜீவனாம்சங்கள்

அமெரிக்காவில் ஒரு ஓட்டல்காரர் தனது வாழ்நாளுக்குப் பின், தான் வளர்த்துவந்த கிளியின் ஜீவனாம்சத்துக்காக தனது சொத்திலிருந்து 200 பொன் ஒதுக்கிவைத்திருந்தாராம். ஸ்ரீமதி எ. போர்சன் தாம் வளர்த்துவந்த நாயின் ஜீவனாம்சத்துக்காகத் தனது உயிலில் 2300 பொறுமான சொத்து எழுதி வைத்தாராம். சமீபத்தில் காலஞ்சென்ற கர்னல் ஊளாட்லோதர் என்பவர் தமது நாய்க்கு மாதம் 4 பொன் சாப்பாட்டுச் செலவுக்குக் கொடுக்கும்படி உயில் எழுது வைத்தாராம். ஒரு நாடகக்காரரின் தாய் தான் வளர்த்துவந்த குரங்குக்கு 1000 பொன் எழுதி வைத்தாராம். ஒரு அமெரிக்கர் தன் குதிரைக்கு 27 ஏக்கர் நிலமும் பாங்கியில் 400 பொன்னும் விட்டுச் சென்றாராம்.

## தீவிபத்து

தீவிபத்து கூரைவீடுகளில் வசிப்பவர்களுக்கு அடிக்கடி உண்டாவது சகஜமாயிருக்கிறது. இதனைத் தடுக்க இங்கே ஒவ்வொரு கிராமத்திலும் கூரைவீடுகளெல்லாம் மச்சுவீடுகளாய் வருகின்றன. இதைத் தவிர இதனைத்தடுக்கவேறு உபாயத்தைக் காணோம். பண்டைக்காலத்தில் பாபத்திற்கும் பழிக்கும் அஞ்சி ஜனங்கள் அறநெறியை மேற்கொண்டிருந்தபடியால் கூரைவீடுகளில் ஆபத்துக்கிடமில்லாமலிருந்தது. இக்காலத்தில் பாபத்துக்கும் பழிக்கும் அஞ்சாநெஞ்சம் படைத்த தீயர்கள் மிகுந்திருக்கிறபடியால் போதுமான காப்பின்றி எதையும் அனுபவிக்க இயலுவதில்லை. வருஷந்தோறும் ஏழை மக்களுடைய வீடுகளில் நூற்றுக்கணக்காய்த் தீக்கிரையாய் வருவது சகஜமாயிருக்கிறது.

இந்த வழியில் தீ விபத்து ஏற்படுவதொரு பக்கமிருக்க அடுப்பண்டைப் பழக்கமுடைய பெண்களின் சேலையில் அவர்களை அறியாமல் தீப்பிடித்துக் கொள்வதும் அதனால் அவர்கள் மரணமடைவதும் அடிக்கடி நேரிடுகின்றன. இந்தவிஷயத்தில் ஸ்திரீகள் தங்களுக்குத்தாங்களே ஜாக்ரதையெடுத்துக் கொள்வதைத் தவிர இதனைத் தடுக்க வேறுமார்க்கத்தைக் காணோம். சில சமயங்களில் ஏழெட்டுவயது பெண்களும் விளக்கேற்றுகையிலும் அடுப்பண்டை செல்கையிலும் இப்படிப்பட்ட ஆபத்துக்குள்ளாகின்றனர். சமீபத்தில் சென்றமாதத்தில் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் ஏழுவயதுள்ள ஒரு சிறியபெண் அடுப்பண்டை போனபோது அவள் பாவாடையில் தீப்பிடித்துக்கொள்ள அதனால் மரணமடைந்தாள் என்றறியலானோம்.

தாய்மார்கள் தாங்கள் அடுப்பண்டை இருக்கும்போது ஜாக்ரதையாயிருப்பதுடன் சிறு பெண்களை அடுப்பண்டை வரவொட்டாமல் தடித்துக்காக்கவேண்டும். அவர்களை விளக்குப்பொருத்தும்படி ஏவுவதும் கூடாது. மூன்றாவதாகத் தாய்மார்கள் தங்கள்பெண்களைப் புக்ககத்துக்கனுப்பும்போது அவர்கள் அடுப்பண்டை பழகுகையில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஜாக்ரதையைச் செவ்வையாய்ப் போதித்தனுப்புதல் வேண்டும். இந்த ஆபத்து அஜாக்ரதையினாலேற்படுவதென்பதை ஸ்திரீகள் உணர்வார்களாக.

## முஸ்லீம் நன் கொடை.

மகாத்மாவின் முஸ்லிம் நண்பர் ஒருவர் காங்கிரஸ் வேலைக்காக ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறாராம்.

நெல்லூர் நிலச் சுவான்தரான ஸ்ரீமான் புச்சி சுந்தர ரெட்டியார் மகாத்மா காந்தியைச் சந்தித்து 1000 ரூபாய் அடங்கிய பணப்பை கொடுத்தார். அவர் ஆசிரமத்திற்கு 365 ரூ. கொடுத்து வருகிறார்.

# அதிக ஆசை அதிக நஷ்டம்.

(140-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் சரி சமானம்; அவனுக்கு மேலானவனென்று ஏன் சொல்லக்கூடாது? சின்னப்பண்ணையை வாங்கிப் பெரிய பண்ணையையும் வாங்க நம்மிடம் பணமிருக்கிறது. ஓஹோ! மறந்துவிட்டேன். மானேஜர் வெளியே போவதற்குக் குதிரைவண்டியும், நாம்போவதற்கு மோட்டார் வண்டியும் வாங்கவேண்டும். நாம் இத்தனை நாள் இருந்ததைப் போல இனிமேல் இடுப்பில் துணியைக்கட்டிக்கொண்டு பெரியபண்ணை சின்னப்பண்ணை வீட்டுப் பந்தக்காலைப் பிடித்துக்கொண்டு நிற்கவேண்டிய அவசியமில்லை. எஜமாங்களே என்று அவர்களை அழைக்கவேண்டிய அவசியமுமில்லை. நம்மைத்தான் இனி எல்லாரும் எஜமாங்களே என்று அழைக்கவேண்டும். அடி தெரிந்ததா—என்று தன் மீசையை முறுக்கிக்கொண்டும் இன்னும் பலவாறாகப் பிதற்றிக்கொண்டுமிருந்தான்.

இப்போது அவன் மனைவி "நீ செல்ரதெல்லாம் சரிதான். நீ மாத்திரம் இவ்வளவெல்லாம் செஞ்சிக்கினே. எனக்கு நவே நிவே ஒண்ணும் வாண்டாமா? நவை இல்லாட்டிப்போனா பண்ணக்காரன் பெஞ்சாதி என்னு எப்படிச்சொல்லுவாங்க?" என்றாள்.

முத்தையன்:—அடெ எளவே! உனக்கு இல்லாத நகையா! என்ன நகைவேண்டும். சொல்லு. இப்



போதே தட்டானைக் கூட்டிக்கொண்டுவந்து செய்ய உத்தரவு கொடுக்கிறேன்.

மனைவி—இப்படிப்பட்ட மவராசனையல்லவா தேடிக் கட்டிக்கிணம்; எனக்குப் பூச்சிக்கூடு தண்டட்டிகை, கொப்பு, மூக்குத்தி, பட்டைக்காரை, ராக்கடி எல்லாம்வேணும்—என்று இப்படி ஒரு ஜோடு நகை அடுக்கினாள்.

முத்தையன்:—இந்த எளவு எங்கேயடா நமக்கு வந்து வாய்த்தது? பெரியபண்ணை எஜமானியம்மா—எஜமானியம்மா என்கிறேனே! நான்தான் எஜமானாய் விட்டேனே, இனியுமா அவர்களை எஜமானியம்மாவென்கிறது?—தன்சிங் மனைவி என்றல்லவா சொல்லவேண்டும், தன்சிங்மனைவி போட்டுக்கொண்டிருக்கிற மாதிரி ஒரு செட் கல்நகைகளுக்கு அந்த அந்த எளவு கம்பெனிம்பர் மறந்துபோய் விட்டதே, உம், பி. ஆர் அண்ஸன்சுக்கு எழுதி ஒரு செட்தருவித்து உன் கழுத்திலே, காலிலே, கையிலே இடுப்பிலே, மூக்கிலே, தலையிலேபோட்டு அழகுபார்க்கிறதைவிட்டுவிட்டுப் பூச்சிக்கூடாம் தண்டட்டிகையாம், கர்நாடக எழவைக் கட்டிக்கொண்டு அழுகிறாய் இன்னமும்.

மனைவி.—ஏ ஆயா! நமக்கென்னத்துக்கு அத்தாச்சோடு கல்நவை! அதெல்லாம் புளிச்சி புளிச்சின்னுமே என்றுசொல்லி உடம்பைக் குலுக்கிக்கொண்டு சிரித்தாள்.

முத்தை:—அடஎழவே; அந்தமாதிரி போட்டுக் கொண்டால் தான் உன்னை எல்லாரும் எஜமானியம்மா என்று கூப்பிடுவாங்க.

மனைவி:—ஒருகுதி குதித்து, ஏ! எசமானியம்மா, எசமானியம்மா அந்த மாதிரிநவையெல்லாம் போட்டுக்கினா நான்பலே சோக்கயிருப்பேனல்லவா? என்று சொல்லிக்கொண்டு கை, கால் இடுப்பு முதலியவைகளை நீட்டி நீட்டி அழகு பார்த்துக்கொண்டு ஒய்யாரநடை நடக்க ஆரம்பித்தாள்.

முத்தை:—ஆம் அதற்கென்ன தடை? நீ பலே ஷோக்காக ஆய்விடுவாய்! இதெல்லாம் நாம் செய்து கொண்டபிறகு, நான் பெரிய மனிதனாய்விடுவேன். அப்போது அவர்கள் எல்லாம் குடிக்கிறமாதிரி பிராண்டிதான் குடிப்பேன். கள்ளுசாராயம் கையாலேகூடத் தொடமாட்டேன். இக்ஷா நெம்பர் ஒண் பாட்டில் கணக்காய் வீட்டிற்கு அனுப்பிவிடும்படி ஆர்டர் செய்து விடுவேன்'' என்றுசொல்லிக்கொண்டே சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவனாய் மெய்மறந்து "அடே பயலே, ஒரு பாட்டில் இக்ஷாநெம்பர்ஒண் கொண்டுவா" என்றான்.

எந்த அடே பயல் இங்கிருக்கிறான், இக்ஷாநெம்பர் ஒண் எங்கிருக்கிறது? ஒருவரும் கொடுக்கவில்லை, முத்தையன் உடனே கோபங்கொண்டு தன் பக்கத்திலிருந்த பெண்சாதியைப்பார்த்து "அடி கழுதைமுண்டே, நீ மாத்திரம் நகைபேட்டு மினிக்குக்கிறது. அந்த



பிராண்டியை எடுக்கிறதற்கு உனக்கு என்னகேடு'' என்று அவளை ஓர் உதை உதைத்தான்.

மனைவி:—சரேலென்று ஒதுங்கிக்கொண்டு "ஏ ஆயா, ஒய்யாரத்தைப்பபர்ரா நவையும் காணோம் கிவையும் காணோம் சாராயமாம், பிராண்டியாம் பீப்பா பீப்பாயா வாங்கி வெச்சிருக்கிறமாதிரி! எதக்கரத்.தேப்பார்ரா எம்பொட்டிமவன்!

முத்தை.—கழுதை முண்டே, இனி இப்படி சொன்ன பேச்சு கேக்காதபோனயோ கொன்னுட்டேன் பார்த்துக்கோ,'' என்று சொல்லிக்கையை ஓங்கிக் குத்தப்போனான்.

மனைவி:—சடக்கென்று நகர்ந்துகொண்டு "ஏ ஆயா வெட்டயும் குத்தயும்பார்ரா! ஓம் பொதயல் புண்டுவுளுந்துபோக! ஒன்னெடுப்புக்கொலய, என்னை ஒதக்கரவரையில் ஆச்சா, குமரேசனிடம் இதோ போய்ச்சொல்லி உன் மானத்தைக் கெடுத்துட்டேரன்'' என்று கத்திக்கொண்டே. வாசல்பக்கம் போனாள்.

முத்தை:—அடடா, மோசம்போய் விட்டதே என்ன காரியம் செய்தோம்'' என்று நினைத்து மனைவியைப் பின் தொடர்ந்துபோய் அவளைச் சமாதானம் செய்து அழைத்து வந்தான்.

மனைவி:—கோபித்துக்கொண்டு ஒன்றும்பேசாமல் வழக்கம்போல் அங்கிருந்த வைக்கோல்மெத்தையின்மேல் படுத்துக்கொண்டு விட்டாள். முத்தையனும் நேரஞ்சென்றுவிட்டபடியால் அப்படியே துணி

யைவிரித்துப் படுத்துக்கொள்ள இருவரும் அயர்ந்து நித்திரைபோய்விட்டார்கள்.

மனிதப்பிரேரேபணை இவ்வாறிருக்க தெய்வசங்கல்பத்தைக் கவனிப்போம். (வரும்)

அ. கோபால ரத்தினம்.

---

## சிக்கனம் கற்பிக்கப்பட்ட விதம்

“தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை” என்றபடி தனவந்தர் வீட்டுப் பிள்ளைகள் சிறப்பமுதலே தங்கள் மனம்போனவாறு செலவு செய்து கைதேர்ந்தவர்களாக, அவர்கள் பெரியவர்களான பின் டம்பாச்சாரித்தனத்தாலும் ஊதாரிச்செலவாலும் தங்கள் முன்னோர்கள் தேடிய ஆஸ்தியை அழித்துவிட்டு அதோகதியாவதைப் பார்க்கிறோம். பிரபு ஒருவர் தனது இரு குமாரர்களுக்கும் பேருக்கு 5 ரூபாய் வீதம் வாரந்தோறும் அவர்களது சொந்தச்செலவுக்கு உதவி வந்தார். வருஷக் கடைசியில் அவர்களைக் கணக்குக் கேட்க ஒருவன் வாரந்தோறும் ஐந்து ரூபாயில் 2 ரூபாயைச் செலவு செய்துவிட்டு 3 ரூ. மீந்துவைத்திருந்தான். மற்றவனோ, தகப்பனார் கொடுத்த 5 ரூ. போதாமல் தன் தாயாரிடம் 5 ரூபாயும் மேற்கொண்டு கடனாக 5 ரூபாயும் வாங்கிச் செலவு செய்ததாகத் தெரியவர, உடனே அவர் சினமடைந்து பிரம்பால் ரத்தம் பீறட்டோடும்படி தழும்பேறுமாறு நன்றாய் அவனை அடிக்கலானார். குறுக்கிட்ட அவனது தாயாருக்கும் பூசை கிடைத்தது. இது உண்மையாய் நடந்த சம்பவம். அவ்வாறு அடியுண்ட மகன் தற்போது பெரியவனாகித் தன் தகப்பனாரின் பூர்வ ஸ்திதிக்கு யாதொரு குறைவும் வராமல் அஷ்ட ஐசுவரிய சம்பன்னனாய் விளங்குகிறான்.

ஐ. பி. கோவிந்தசாமி பிள்ளை.

## எனக்கு ஏன் பிழைப்பு கிடைக்கவில்லை?

ஒரு வைத்தியன் தன் தொழிலில் ஜீவிப்பதற்காக ஓர் ஊருக்குப் போய் அங்கே தன்னையும் தன் மருந்தையும் பற்றி விளம்பரப்படுத்திக் கொண்டான்; அப்படி ஆறுமாத காலம் செய்து பார்த்தான். அவ்வூரில் ஒருவராவது அவனிடம் வைத்தியத்திற்கு வரவில்லை. அது கண்டு அதிசயித்து வைத்தியன் அவ்வூர் பெரியார் ஒருவரிடம் போய், “நான் இவ்வூருக்கு வந்து ஓர் ஆறுமாத காலமாகிறது. ஆறுமாத காலமாயும் என்னிடம் வைத்தியத்திற்காவது மருந்துக்காவது ஒருவரும் வரவில்லை, காரணமென்னவென்று தெரியவில்லை” என்று கூறினான்.

அவர், “இவ்வூர் வாசிகளுக்கு நோய் வருவது அரிது. வந்தாலும் வைத்தியரைத் தேடாமலே இவர்கள் நோயை நீக்கிக்கொள்வார்கள்.” என, வைத்தியன், “அது எப்படி?” என்று கேட்டான்.

பெரியவர்:—ஐயா! ஆகாரம், நீர், காற்று—இம்மூன்றுந்தான் தேகத்திற்குச் சௌக்கியம் தருவன. இவை மூன்றும் சுத்தமாயில்லாவிட்டால் அல்லது முறை தவறி உபயோகிக்கப்பட்டால் நோய் வருவது திண்ணம். இவ்வூர் வாசிகள் சுகாதாரத்தைத் தேடிக்கொள்வதில் ஜாக்கிரதையுடையவர்கள். இவர்கள்—பசியெடுத்த பின்னரே உணவருந்துவர், வயிறு

நிறைந்த பின்பே உணவை விட்டு நீங்குவர். இது இவர்கள் வழக்கம். ஊர் ஜன நெருக்கமுடையதன்றாகையினால் இவ்வூரில் காற்றும் நீரும் மகா பரிசுத்தமுடையவை. அன்றியும் இவ்வூரார், "நாம் உண்பது ஜீவித்து ஆண்டவனைப் புகழ்வதற்கு, நாம் ஜீவிப்பது உண்பதற்கல்ல" என்னும் கொள்கையுடையவர்—என்று கூறினார்.

வைத்தியன், "ஆ!—சுகாதாரத்திற்கு இக்கொள்கைகளைவிடச் சிறந்த தொன்றில்லை. இவ்வூருக்கு வைத்தியர் தேவையில்லை" என்று கூறி அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு, காலையில் படுக்கைக் காபியும் உடனே காலைக்காபியும் அப்பால் ஒன்பது மணிக்கு உண்டியும் பின்னால் இரண்டு மணிக்கு டீ பனுடன் காப்பியும் அதன் பின் மாலைச் சிற்றுண்டியும் இரவு ஏழு மணிக்கு இராச் சாப்பாடும் பின்னால் படுக்கைப் பாலும் அருந்தும் வழக்கமுடையவர்கள் குடியேறியிருக்கும் மூட நாகரிகம் நிறைந்த ஊர் போய் வைத்தியஞ் செய்யத் தொடங்கிச் சுகமாக வாழ்ந்து வந்தான்.

---

## நாய்க்குத் தெரியுமா ஒரு சந்திப்பானை.

ஒரு குறுக்கு வழியே இரண்டுபேர் போய்க்கொண்டிருந்தனர். அங்கிருந்த நாயொன்று அவர்களைக் கண்டு குலைத்தது. அவர்களில் ஒருவர் அதுகண்டு பயந்தார். மற்றவர் "ஏன் பயப்படுகிறீர்!" 'குலைக்கிற நாய் கடிக்காது' என்பது உமக்குத் தெரியாதா? என்று கேட்டார். அவர் குலைக்கிற நாய் கடிக்காதென்பது உமக்குத் தெரியும். எனக்கும் தெரியும்? நாய்க்குத் தெரியுமா?—என்று விநோதமாய்க் கேட்டார்.

## தெய்வ பேத நினைப்பது பாபம்

சிவ விஷ்ணுக்களுக்குப் பேதங் கற்பிப்பது கொடிய பாபம் என்று பெரியார் கூறியிருப்பதை நம்மவர் சிறிதும் கவனிப்பதே யில்லை. அப்படி பேதங் கற்பிப்பதால் ஏதேனும் பயனுண்டோவெனில் இல்லை. நிஷ்பிரயோசமான செய்கை செய்பவர்களை எதிற் சேர்த்தெண்ணுவது? மநுஷ கோடிகளிலே சேர்க்கப்படுமோ?—

அந்தோ சிவ வைஷ்ணவ பேதங்களினால் ஏற்பட்ட தொல்லைகள் கொஞ்சமல்ல வென்பதும் ஏற்பட்டுவரும் தொல்லைகள் கொஞ்சமல்ல வென்பதும்—சிறுவருங்கூட நன்குணர்வர். அப்படி யிருந்தும் மத வைராக்யங் கொண்டு குருட்டு வழியாகவே நடக்கும் ஈனர்கள் தெய்வ பேதம் பாராட்டி நம்மவர்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்தியதனால் நம்நாடு எவ்வளவு சீர்கேடடைந் திருக்கிறதென்பதை அறியாதாரில்லை. இருந்தும் இந்தத் தொல்லையைக் களைய ஜன சமூகச் சீர்திருத்தக்காரரென்று வெளிவந்துள்ளார் கவனியாமல், சாத்தியப்படாத வழிகளிலெல்லாம் நுழைந்து ஜன சமூகச் சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்கின்றனர். இதனை அறிவுடைய உலகம் புத்திசாலித்தனமென்று பாராட்டாது.

சகோதரர்களே! மகான்கள் தெய்வபேதமேனும் மதபேதமேனும் எண்ணித் தகாத காரியம் செய்ததே

கிடையாது. சிவவாக்கியர் என்பவர் பரமஞான சிகாமணியென்பதும் மகானென்பதும் பெரும்பான்மையற்குந் தெரியும். அவர்—

"தங்கமொன்று ருபம் வேறு தன்மையானவாறுபோல்
செங்கண்மாலும் ஈசனும் சிறந்திருந்ததெம்முளே"

என்றும்,

நாழியப்பு நாழியுப்பு நாழியானவாறுபோல்
ஆழியோனும் ஈசனும் அமர்ந்து வாழ்ந்திருந்திடம்—

என்றும்,

எருதிலேறும் ஈசனும் இயங்கு சக்கரதரனையும்
வேறுகூறிப்பேசுவோர் வீழ்வர் வீணரகிலே—

என்றும்,

"தில்லைநாயகனெவன் திருவரங்கனுமவன்
எல்லையான புவனமும் எகமுத்தியானவன்
பல்லுநாவுமுள்ளபேர் பரிந்துகூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே"

என்றும்—திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

"அரனதிகன் உலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்க்கும், பரகதி சென்றடைய வரிய பரிசேபோல்"—என்று கம்பர் கம்பராமாயணத்திலும்- "பல தெய்வம் பழித்துரைக்கும் பாதகரும் பரந்து தங்கள், வாய்வழியே புழுச்சொரிய மாநரகக்கும்பி யிடை மறுக்கக்கண்டான்"—என்று ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் ஸ்ரீமத் ராமாயணம் உத்தரகாண்டத்திலும் சொல்லியிருக்கிறார். இவர்களுடைய இப்போதனைகளையல்லாமல், "தெய்வமிகழேல்" என்னும் ஔவையா



ரின் போதனை நாம் சிறுவயதிலே பெற்ற அரியபோதனையாகுமாதலால் இந்தத் திருவாக்கை நினைப்பவர், தெய்வபேத நினைப்பதும் நினைப்பவருடன் சேருவதும் தவறென்றுணர்ந்து நல்லவழியை நாடுவார்களென்பது திண்ணமாம்.

## கோபம்.

உத்தமர், மத்திமர், அதமர்—என்று மூவருண்டு. அதம (கயவ) ருடைய கோபம் பிளவுபட்ட கல்லைப் போலாகும். மறுபடியும் பொருந்தாது. மத்திம (புத்தியீன) ருடைய கோபம், வெட்டுப்பட்ட பொன் துண்டு போலாகும். மூசையில் வைத்துப் படிக்காரமிட்டுருக்கப் பொருந்துமப்பொன்போல் இன்னொருவர் இடையிலிருந்து சமாதானஞ் செய்தபின் அக்கோபம் நீங்கும். மேம்பாட்டினையும் சிறப்பினையும் கல்வித்திறத்தினையும் சம்பிரதாயத்தையு முடைய உத்தமர்களுக்குக் கோபம் வராது. வந்தாலும் தண்ணீரின் பேரில் பாணத்தைத் தொடுத்தால் வடுவாகிய காயமும் வேறுபாடாகிய பிரிவுமில்லாமல் ஒன்றாயிருக்குந் தன்மை போலாகும். (பாரதம்)

"கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழியவெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்" (மூதுரை.)

## சபாநாதர்பேரில்
## முத்துத்தாண்டவர் கீர்த்தனம்.

**இராகம்—கல்யாணி.** **தாளம்—ஜம்பை.**

பல்லவி.

*பூலோக கயிலாசகிரி சிதம்பரமல்லாற்—*
*புவனத்தில் வேறுமுண்டோ*

அநுபல்லவி.

*சாலோக சாமீபசாரூப—சாயுஜ்ய*
*சபைவாணரா நந்தத்தாண்டவம் புரிவதாற்* (பூ)

**சரணங்கள்.**

1 *நாலுமகமேருவென்னும் நாலுகோபுர நிலையும்*
*நவரத்நமணிகளால் ஒளிர்சித்ரமணிகளும்*
*மேலுலகை அளவிடுதற் போலுயர்ந்தேவெயில்*
*விரிந்தகம்பத்திரள்களும்*
*காலுலவுமாயிரக் கான்மணிமண்டபமும்*
*நவ-கங்கையும்-நிறைந்த-சிவகங்கையின்*
*விசாலமும்-ஆநிலையின்மாலும்—அயனு*
*மறியாதபேரம்பலமு மேவுவோர்க்-கற்புதம்*
*புரிதலாற்* (பூ)

2 *வேதமுதலெனுமூல-நாதர்தூயமேரு-*
*வில்லியார் சிவகாமவல்லியார் கோவிலும்*
*மாதவர் விண்ணவர் முனிவர் போதர் வித்யாதரர்*
*மாளிகைகள் சூளிகைகளும்*



*ஏதமொருசற்றும் அணுகாத கட்டளைகளும்*
*இரவிபோல் இலங்குகின்ற இந்த்ரவிமானங்களும்*
*காதலுற்றேகண்ட பூதலத்தோரெல்லாம்*
*காணநூறாயிரம் கண்வேண்டுமென்கையாற்* (பூ)

3 *மேவார்தொழுந்தில்லை-மூவாயிரம் புனிதர்*
*வீதியும்சைவர் திருவீதியுமடங்களும்*
*தாவாதபசிதவிர வாவாவெனுஞ்சத்ர*
*சாலையும்பல சோலையும்—*
*மூவாவிகளும் வயலும் ஓவாமலேபெருகு*
*பொன்னிநதியும் தெருவும் மன்னியவராங்கண்டு*
*தேவாரமூவர்முதற் பாவாணரனைவரும்*
*சிவஸ்தலத்திலதிகந் தில்லைவனமென்கையாற்* (பூ)

(வரும்)

---

## வியாதி மூலங்கள்

*"கல்லினால் மயிரினால் மீதூண் விரும்பலாற்*
*கருதிய விசாரத்தினாற்*
*கடுவழி நடக்கையான் மலசலமடக்கையாற்*
*கனிபழங்கறி யுண்ணலால்*
*நெல்லினால் உமியினால் உண்டபின் மூழ்கலால்*
*நீடு சருகிலையூறலால்*
*மெல்லிநல்லார் கலவி அதிகமுள் விரும்பலால்*
*வீழ்மலஞ்சிக்குசையினால்*
*மிகுசுமை யெடுத்தலால் இளவெயிற் காய்தலான்*
*மெய்வாட வேலை செயலால்*
*வல்லிரவிலே தயிர்கள் சருகாதி யுண்ணலால்*
*வன்பிணிக்கிட மென்பர்காண்*
*மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு*
*மலைமேவு குமரேசனே"*

*"குமரேச சதகம்"*

## நித்திரையற் றிருப்பவர்கள்.

சதுரங்கதளத்துடன் சாமர்த்தியமுமுடைய அரசன் சளையாமல் போர்புரியத் துணிந்து வளைந்து கொண்டால் அவனை வெல்வதற்கு வல்லமை யில்லாத இராஜ தீரர்கள் எவர்களோ அவர்களும், தான் சம்பாதிக்காமலே தந்தை முதலிய பேர்கள் எச்சிற்கையாலும் காக்கை யோட்டாமல் சேகரித்து க்ஷேமத்தில் வைத்த திரண்ட திரவியங்களைப் பந்துஜனபோஷணை தானதருமம் பரோபகாரம் செய்யாமல் தாங்களே பிரபுக்களென்று இறுமாந்து பொன் காத்த பூதமே போற் பார்த்திருந்து அந்தப் பொருளை இழந்த பிற்பாடு தலை கவிந்து வாகனமிழந்து பூரியாகத் திரியும் பேதை போன்ற லோபியர் எவரோ அன்னாரும், திருடவேண்டுமென்னும் ஞாபகமுடைய திருடர்களும், கலகமும் வஞ்சகமும் செய்து ஜீவனம் செய்யக கங்கணங் கட்டிக் கொண்டு திரிகின்ற காமிகளும் பற்பல பாஷைகளையும் சாஸ்திரங்களையும் படித்துணரவேண்டிய ஆசை கொண்டவர்களும், நித்தியதரித்திரத்தில் ஆழ்ந்து வருந்தி நிலையாகிய வாழ்வைப் பெறவேண்டுமென்னும் இச்சையுடையவர்களும், எந்த வேளையும் போகத்தை விரும்பிக் காமாந்தகராய்த் திரிபவர்களும், வியாதிக்காரர்களும், ஆகிய இவர்களெல்லோரும் தங்களுடைய கவலையினால் நித்திரையற்றிருப்பார்கள். (பாரதம்.)

---

## சந்திரன்

திருவாளர் கி. நரசிங்கப்பிள்ளை லோகோபகாரியில் எழுதுகிறார் :—

### 1. உற்பத்தி.

சந்திரனது பிறப்பைப் பற்றிப் புராண இதிகாசங்களில் பலவகையாகக் கூறப்பட்டிருக்கின்றன. சந்திரன் திருப்பாற் கடலில் பிறந்தவன் என்றும், அத்திரி முனிவரின் குமாரன் என்றும், விஷ்ணுவின் மார்பில் உதித்தானென்றும் கூறுகிறார்கள்.

அத்திரி குமாரன் சந்திரன் என்பதைப் பின்வரும் பாகவதச்செய்யுள் வலியுறுத்துகிறது.

அந்தமி லாழிதாங் கங்கை மாயவன்
உந்தியம்போதிடை உதித்த நான் முகன்
தந்தனன் அத்திரி தன்னை அன்னவன்
இந்துவை அளித்தனன் விழியினென்பவே

இங்ஙனம், அத்திரி முனிவருக்குக் குமாரனாய்த் தோன்றிய 'சந்திரன்' நட்சத்திரங்களுக் கெல்லாம் தலைவனாக விளங்கி வான வெளியில் உலவுகிறான்.

மேல் நாட்டினர் சந்திரனை அஃறிணையாக பாவிக்கிறதுடன் பூமியைப் போல ஓர் உலகமென்றே கருதுகின்றனர். ஆண்பாலாகக் கொள்வதில்லை.

எனினும் ஆசிரியர் ரைட் கூறுகிறபடி ஒவ்வொருவரும் தம்முடைய மதத்தை ஒட்டியே விஷயங்களை

ஆராயவேண்டுமே யல்லாது மற்றவர்களைப் பார்த்து நடக்கக் கூடாது.

## 2. நிறம்

சந்திரனுடைய நிறம் 'வெண்மை' என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே, நிலவைப் பாலுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள்.

சந்திரனும், சுக்கிரனும் வெண்மை நிற முடையவர்கள் என்று ஞானப்ரதீபிகை ஆரூட ஸம்க்ஞா காண்டம் 57-வது சுலோகம் கூறுகிறது.

சூரியனைவிட்டுக் கிழக்கே விலகிப் போகப்போக பார்வையிலும் வெளுப்பைக் கீழ் பாகத்திலும் அடைகிறான் என்று பிருஹத் ஸம்ஹிதை கூறுகிறது. பாஸ்கர சித்தாந்தமும் இப்படியே கூறி யிருக்கிறது மேலும்,

> கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
> உலாவும் சடைமேலுறையும்—நிலாவை
> வழிய வார்த்தா லன்ன மா நீற்றார்

என்று புகழேந்திப்புலவர் கூறிய செய்யுள் வலி யுறுத்தும். மகாகவி காளிதாசனும்,

> "மௌக்திகா சந்த்ரிகா மண்டல உத்பாவி"

என சந்திரனை முத்தின் நிறத்திற்கு ஒப்பிட்டிருப்பது கவனித்தற் பாலது.



## 3. இடம்

சந்திர உலகம் பூமியிலிருந்து நான்கு லட்சம் யோசனை உயரத்தில் இருப்பதாகச் சிவதர்மோத்தரம், தத்துவ நிஜாநுயோகசாரம் சாற்றுகிறது.

ஆனால், ஸ்ரீ மகாபாரதம் வீட்டும பருவம், அண்டகோச அடுக்குரைத்த சருக்கம் 63-ம் செய்யுள்,

> "இரவிபத மீதுலக் கோசனை யோரிலக் கமதாம்
> பரவு மதின் முப்பத்து முக்கோடிப் பண்ணவர்கள்
> விரவியுடன் வழிக்கொள்வர் வெண்மதியின்
> புரமாகு மோ ரிலக்கம் புகலி யோசனை புகுந்தால்"

என்று கூறு மாற்றால் பூமியிலிருந்து சந்திரனுடைய உலகம் இரண்டு லட்சம் யோசனை உயரத்தில் இருப்பதாக ஏற்படுகிறது.

## 4. உருவம்

சந்திரனுடைய உருவம் வட்டம். இதைப் பௌர்ணமி தினத்தில் பார்த்தால் நன்கு விளங்கும்.

ஆனால் சில தினங்களில் உருவத்தில் குறைவதாகவும், சில தினங்களில் வளர்வதாகவும் காணப்படுகிறது. இதற்குக் காரணம் நம்மவர்கள் ஒரு விதமாகவும் மேல்நாட்டார் ஒருவிதமாகவும் கூறுகின்றனர். ஆராய்ந்து பார்க்கின், இரண்டும் பார்வைக்கு வித்தியாசம்போல் காணப் படினும், உண்மையில் ஒன்று என்றே ஏற்படும்.

1. நம்மவர்கள் கூற்றுவது :—

தக்கனுடைய காலத்தில், சந்திரன் நாளுக்கு நாள் உருவில் குறைந்துபோனான். பிறகு சிவபெருமானை

வணங்கி, அவருடைய வரப் பிரசாதத்தால் முன் போல் வளர்ச்சியை நாளுக்கு நாள் அடைந்தான் என்பதாம். பரமசிவன் சந்திரனைத் தமது சடாபாரத்தில் வைத்திருப்பதாகப் புராணங்கள் பகருகின்றன.

இதன் தத்துவங்களை விரிக்கின் பெருகுமாதலின் இத்துடன் விடுத்தாம்.

2. மேல் நாட்டார் கூற்றுவது :—

சந்திரனுடைய உருவம் வளர்வதும் தேய்வதும் இல்லை என்றும், அப்படித் தோற்றுவதற்குக் காரணம், சூரியனுடைய வெளிச்சத்தை எவ்வளவுக் கெவ்வளவு பெறுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு ஒளிபெற்று பிரகாசிக்கிறது என்பதாம். இதனால் சந்திரனுக்கு இயற்கையில் ஒளியில்லாத காரணத்தால் அதனுடைய உருவம் நமக்குச் சூரிய வெளிச்சம் அதன்மேல் பட்ட அளவு தான் தெரியும் என்று ஏற்படுகிறது.

ஆனால் இத்தகைய மேல் நாட்டார் கொள்கையின் படியே, சூரியனைவிட்டுக் கிழக்கே சந்திரன் விலகிப் போகப்போக வெளுப்பைக் கீழ்பாகத்தில் அடைகிறது என்று வராஹமிகிராச்சாரியரும், பாஸ்கராச்சாரியரும் கூறி யிருக்கின்றனர்.

எனவே, கிழக்கில் போகப்போக வளர்ந்துகொண்டும், மேற்கில் போகப் போகத் தேய்ந்துகொண்டும் போகிறது என்பது வெளிப்படுகிறது.

சந்திரன் வெளுப்பு நிறத்தைப் பெறும் காலமாகிய 15 தினங்களை 'சுக்கில பட்சம்' என்றும் அந் நிறத்தைச் சிறிது சிறிதாக இழக்கும் காலமாகிய 15-நாட்களை 'கிருஷ்ண பட்சம்' என்றும் கூறுகிறோம். 'கிருஷ்ணம்' என்றால் கறுப்பு நிறம் என்று பொருள். அஃதாவது "இருள்" கிருஷ்ண பக்ஷத்தில் சந்திரனுக்கு ஒளி இல்லை.



## 5. தொழில்

சூரியனைப்போலவே சந்திரனும் ஆகாய வெளியில் இரவில் சஞ்சரித்து நமக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறான். சூரியனிடமிருந்து பெற்ற வெளிச்சம், பூமியில் பிரதிபலிக்கின்றது.

சந்திரனுடைய ஒளியும் அதிகப் பயனுமுள்ளதாயிருக்கிறது. எப்படிப்பட்ட விளக்கின் வெளிச்சமும் சந்திர ஒளிபோல் அவ்வளவு பிரகாசத்தை இரவில் கொடுக்க முடியாது.

## 6. கிரகணம்

சந்திர கிரகணம் ஏற்படுத்துவதற்குக் காரணம், சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வருவதால் சூரியனுடைய கிரணங்கள் சந்திரன் மீது படாத பாகம் இருளடைகின்றது. இருளடைந்த பாக அளவே சந்திரக்கிரகண அளவாகும்.

இராகு கேதுக்கள் இங்ஙனம் கிரகணம் உண்டாவதற்குக் காரணர்கள் அல்லர் என்பது ஆராய்ச்சி புரியின் நன்கு விளங்கும்.

## 7. சொரூபம்

'சந்திரனை' நாராயண ஸ்வரூபம் என்றே ஸ்ரீமத் பாகவத புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

எனினும் பெரும்பாலும் சிவ ஸ்வரூபம் என்று தான் ஏனைய புராணங்களாலும் ஸ்மிருதிகளாலும் அறிவிக்கப்படுகிறது. இக்கருத்துப் பற்றித்தான்,

"தீப மாகிய சிவனே போற்றி
சந்திர போற்றி தழலோய் போற்றி."

எனக் கூறினர் பட்டினத்தடிகள்.

ஆனால், வராஹ மிசிராச்சாரியார் தாம் இயற்றிய பிருஹத் ஜாதகம் 2-ம் அத்தியாயம் 4-வது சுலோகத்தில் சந்திரனைப் 'பார்வதி' சொரூபம் என்று கூறியுள்ளார்.

முற் கூறியபடி சந்திரன் தேவஸ்வரூபி யானபடியால் இவனுடைய ஒளி மங்குகிற காலமாகிய கிரகண காலத்தில்,

"ஸ்நாநம் தாநம் ஜபோ ஹோம :
கர்தவ்யே ராஹூ தர்ஸநே."

என்னும், பராசர் ஸ்மிருதி சுலோகப்படி தோஷமடைந்த அக்காலத்தில் ஸ்னானம், தபம், ஜபம், முதலியவைகளைச் செய்து மக்கள் பரிசுத்தமும் ஆரோக்யமும் அடையவேண்டும்.



## 8. கணிதம்

ஆகாயத்திலுள்ள ஜோதிகளுக்குள் சந்திரன் தான் பூமிக்கு அதிக சமீபத்தில் இருக்கின்றான். சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் 238,855 மைல். இரவும் பகலும் இடைவிடாது விரைவாகச் செல்லக் கூடிய ஒரு குதிரை யிருக்குமானால் அது இரண்டு வருஷங்களில் சந்திரனிடம் போய்ச் சேரலாம்.

சந்திரனுடைய குறுக்களவு 2162 மைல். சந்திரன் பூமியைச் சுற்றிவரும் நேரம் நாள்; மணி; நிமிஷம் 27-7-43.

50 சந்திரகோளங்கள் 1 பூகோளம், 7 கோடி சந்திர கோளங்கள் 1 சூரிய கோளம் என்று மேல்நாட்டு வான சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

மேல் நாட்டு வான சாஸ்திரிகள் சந்திரனை ஓர் தனிக்கிரகமாக (Planet)க் கொள்ளாமல் பூமியைச் சுற்றித் திரிகின்ற உபக்கிரக மாகவே (Satellite) கருதுகின்றனர்.

அவர்கள் மொத்தத்தில் 26 சந்திரர்கள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். அதில் பூமியைச் சுற்றும் சந்திரன் ஒன்று. அங்காரகனைச் சுற்றுவது 2, குருவைச் சுற்றுவது 8, சனியைச் சுற்றுவது 10. யுரேனஸ் கிரகத்தைச் சுற்றுவது 4. நெப்த்தியூனைச் சுற்றுவது 1, ஆக 26 சந்திரர்கள் உளர் என்பர்.

# கிராமங்களின் வறுமை நீங்க வழி.

இந்தியாவின் ஜீவநாடி கிராமங்களில் இருக்கிறது. ஏனெனில் 30 கோடி ஜனத்தொகையில் 28 கோடி ஜனங்கள் கிராம வாசிகளாம். 100-க்கு 90 பேர் கிராமங்களிலேதான் வசிக்கின்றனர். இப்படி ஏழுலட்சம் கிராமங்களில் வசிக்கும் ஜனங்களுக்கு வருஷத்தில் 3, 4 மாதம் வேலையிருப்பதில்லை. அவர்களுக்கு எழுத்து வாசனையுமில்லை. குடிகளுடைய பணத்தைக் கொண்டு கல்விகற்ற நாம் அவர்களுக்கு எவ்விதமாய்ப் பதிலீடு செய்யப்போகிறோம். இந்த விஷயத்தில் காந்தியடிகள் நமக்கு நல்ல வழிகாட்டியா யிருக்கிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன்னால் கவிச்சக்ரவர்த்தி ரவீந்திரநாத்தாகோர் சபர்மதி ஆசிரமத்தில் தங்கியிருந்தபோது காந்தியடிகளிடம் "உங்களுடைய நேரத்தையெல்லாம் வீணாக்கி விட்டேனே" என்று மன்னிப்பு கேட்டபோது அவர்கள், "உங்களுடன் சம்பாஷித்த ஒவ்வொரு நிஷமிமும். நான் நூற்றுக்கொண்டிருந்தேன். எனது ஓர் எண்ணம் என்னவென்றால் இந்தியாவிலுள்ள 1 கோடி ஜனங்கள் மாத்திரம் 1 நாளில் 1 மணிநேரம் மாத்திரம் உட்கார்ந்து நூற்பார்களானால் 50,000 ரூபா சம்பாத்தியம் செய்யலாம். ஆகையால் நான் நூற்கும் ஒவ்வொரு நிமிஷமும் நாட்டுக்குச் செல்வத்தை வளர்க்கிறது" என்றாராம்.

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 1 8 0 |
| | பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ... | ரூ. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை | ... ... விலை | ரூ. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கோள்வதானால் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ... | ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, ... | ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்




ஸித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு 'முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## அமிர்தாஞ்சன் டிப்போ,

**7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.**


Vavilla Press ,Madras.